மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி வட்டம், அல்லிகுண்டம் நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டப்பட்டு நவம்பர் 2004 முதல் செயல்பட்டு வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லி அமர்கின்றேன்.*

திரு. லா. சந்தானம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அதற்கு முன்னால் தொடுக்கப்பட்ட கேள்வி. கட்டப்பட்டிருக்கிறது என்கின்ற செய்தி எனக்கும் தெரியும். அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 266; திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

266—

கோயில் பூஜை

***44845—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், நத்தம் ஊராட்சியில் அறநிலையத் துறையின் பராமரிப்பிலுள்ள ஈஸ்வரன் கோயிலில் தினந்தோறும் பூஜைகள் நடைபெற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நத்தம் கிராமம் அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலுக்கு நிலக் குத்தகை மற்றும் மரம் மேல் மகசூல் குத்தகை மூலம் வருமானம் கிடைக்கப்பெறுகிறது. இந்த வருமானத்திலிருந்து திருக்கோயில் பணியாளர் சம்பளம், மின்சாரக் கட்டணம், தீப எண்ணெய் ஆகிய செலவுகளுடன் திருக்கோயில் தினசரி பூஜைகள் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி திருக்கோயிலுக்கு ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். அதே நேரத்தில், வேலூர் மாவட்டம்,*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2005 ஏப்ரல் 1]

திருப்பத்தூர் வட்டம், நத்தம் கிராமம், அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலில் 5 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக 5.64 ஏக்கர் நஞ்சை நிலமும், 34.33 ஏக்கர் புஞ்சை நிலமும் உள்ளன. நிலக் குத்தகையாக 16,550 ரூபாய் ஆலயத்திற்குப் பெறப்படுகிறது. மேலும் மர மகசூல் குத்தகையாக 2,375 ரூபாய் கிடைக்கப்பெறுகிறது. எனவே, இந்த ஆலயத்திற்கு ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் அரசு நிதியுதவி வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 267, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

267—

குடமுழுக்கு

***53431—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, காமக்கூர் கிராமத்தில், அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலின் முகப்புக் கோபுரம் பழுதடைந்துள்ளதைச் சீர்செய்து, குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், காமக்கூர் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலில் இராஜகோபுரம் உட்பட அனைத்துப் பகுதிகளையும் பழுதுபார்க்கும் பணிக்கென, ரூ. 12,85,000/– மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. விரைவில், பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காமக்கூர் கிராமத்திலுள்ள அக்கோயிலுக்கு 30 ஆண்டுகளாக கும்பாபிஷேகம் செய்யப்படாமல் உள்ளதால் பொது